ராஜீவ் காந்தி மருத்துவமனையில் சாந்தன் காலமானார்

இலங்கைக்கு இன்று உடல் கொண்டு செல்லப்படுகிறது



சென்னை, பிப். 28: கல்லீரல் செயலிழப்புக்கு உள்ளாகி சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ராஜீவ் கொலை வழக்கில் தொடர்புடைய சாந்தன் (55) புதன்கிழமை (பிப்.28) உயிரிழந்தார். இதையடுத்து, இலங்கை யாழ்ப்பாணத்துக்கு சாந்தனின் உடல் வியாழக்கிழமை கொண்டு செல்லப்பட உள்ளதாகவும், அங்கேயே இறுதிச்சடங்குகள் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

அதேபோல், ராஜீவ் கொலை வழக்கில் சிறைத் தண்டனை பெற்று விடுவிக்கப்பட்ட பேரறிவாளன், நளினியும் மருத்துவமனைக்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.

சாந்தன் இறப்புக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாந்தன், கடந்த 2022-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி விடுவிக்கப்பட்டார். இலங்கை தமிழரான அவர், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், சாந்தனுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து உயர் சிகிச்சைக்காக சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் கடந்த மாதம் அனுமதிக்கப்பட்டார்.

கல்லீரல் செயலிழப்புக்கு (சிரோஸிஸ்) உள்ளான சாந்தனுக்கு பல்வேறு உடல் நல பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதை அடுத்து அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால், அவை பலனின்றி புதன்கிழமை காலை 7.50 மணிக்கு அவர் உயிரிழந்தார்.

மார்ச் 3-இல் போலியோ சொட்டு மருந்து: தமிழகம் முழுவதும் 43,051 முகாம்கள்

சென்னை, பிப். 28: தமிழகம் முழுவதும் 43,051 முகாம்கள் அமைக்கப்பட்டு போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 3-ஆம் தேதி காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை போலியோ தடுப்பு சொட்டு மருந்து முகாம் நடைபெறுகிறது. 5 வயதுக்குள்பட்ட சுமார் 57.83 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் என 43,051 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பயணத்தில் இருக்கும் குழந்தைகளின் வசதிக்காக பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், சோதனைச்சாவடிகளில் சொட்டு மருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொலைதூரம் மற்றும் எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்காக நடமாடும் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 3,000 வாகனங்களில் மருத்துவக் குழுவினர் செல்ல உள்ளனர்.

போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணியில் சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் என 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

பிராந்திய அலுவலகம், சென்னை (வடக்கு) எண். 139, பிராட்வே, சென்னை-600104

30 KWp கொண்ட கிரிட் மேற்கூரை சூரிய சக்தி தளம் அமைக்க - வடிவமைத்தல், பொருத்துதல், சோதனை மற்றும் இயக்கியமைக்க, ஏலவிலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன

முன்னணி தேசியமயமாக்கப்பட்ட யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, எண்.139, பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை -600104 என்ற முகவரியில் அமைந்துள்ள சென்னை வடக்கு பிராந்திய அலுவலகத்திற்கு 30 KWp கிரிட் மேற்கூரை சூரிய சக்தி தளத்தினை அமைக்க வடிவமைத்தல், பொருத்துதல், சோதனை மற்றும் இயக்கியமைக்க குறிப்பிட்டப்படிவத்தின்படி, தகுதியுடைய விற்பனையாளரிடமிருந்து, இரட்டை ஏலப்புள்ளி முறை அதாவது தொழில்நுட்ப ஏலப்புள்ளி மற்றும் நிதி/விலை ஏலப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன ஏலவிலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள விற்பனையாளர்கள் தொழில்நுட்ப ஏலவிலைப்புள்ளி மற்றும் நிதி/விலை ஏலவிலைப்புள்ளிகள் படிவத்தினை யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, பிராந்திய அலுவலகம், சென்னை வடக்கு, எண்.139, பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை-600104 என்ற முகவரியில் வேலை நேரத்தில் 29.02.2024 அன்று முதல் பெற்றுக்கொள்ளலாம் அல்லது www.unionbankofindia.co.in அல்லது CPP portal www.eprocure.gov.in இணையதளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஏலவிலைப்புள்ளிகள் இரண்டு உறைகளில் சமர்பிக்க வேண்டும். அட்டவணையில் உள்ள வணிக வங்கியில் பெறப்பட்ட முன்தகுதிக்கான விண்ணப்ப முன்வைப்புத் தொகைக்கான கேட்புக் காசோலையுடன் தொழில்நுட்ப ஏலவிலைப்புள்ளியினை உறை எண்.1 இன்மேல் Technical Bid என்று குறிப்பிட்டும், நிதி/விலை ஏலப்புள்ளியினை உறை எண்.2 இன்மேல் Financial/Price Bid என்று குறிப்பிட்டும், இரு உறைகளையும், 3வது உறையிலிட்டு மேற்குறிப்பிட்ட ஏலப்புள்ளியின் பெயரைக் குறிப்பிட்டு சீலிட்டு, சென்னை வடக்கு, பிராந்திய அலுவலகத்தில் 21.03.2024 அன்று பிற்பகல் 3.00 மணி வரை சமர்ப்பிக்கலாம்.

தொழில்நுட்ப ஏலவிலைப்புள்ளிகள், யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, பிராந்திய அலுவலகம், சென்னை வடக்கு, இரண்டாவது தளம், எண்.139, பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை-600104 என்ற முகவரியில் ஏலதாரர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் 21.03.2024 அன்று மாலை 4.00 மணிக்குத் திறக்கப்படும்.

எந்த ஒரு காரணத்தையும் கூறாமல் ஏதாவது அல்லது அனைத்து ஏலவிலைப்புள்ளிகளையும் நிராகரிக்க வங்கிக்கு முழு உரிமை உள்ளது.

இடம் : சென்னை
தேதி: 28.02.2024

ஒப்பம்/
பிராந்திய தலைவர்

LIC HFL LIC HOUSING FINANCE LTD

"ஹாரிங்டன் சேம்பர்ஸ்", பிளாக் எண். C, எண்.30/1A,
அப்துல் ரஜாக் முதல் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.
தொலைபேசி எண் : 044-42010374

மின் ஏல விற்பனை அறிவிப்பு

2002 ஆம் ஆண்டு நிதிச் சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு நலன் அமல்படுத்துதல் சட்டத்தின் கீழ் மற்றும் 2002 பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகளின் 8-ம் விதியுடன் பிரிவு 13(2) என்பவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயல்படுத்துவதற்கான எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக கீழே கையொப்பமிட்டுள்ளவர் இருக்கின்ற நிலையில், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலுவையிலுள்ள பாக்கித்தொகையை திரும்பச் செலுத்துமாறு **கடன்தாரர்கள் / அடைமானம் வைத்தவர்களுக்கு கடன் கேட்பு அறிவிப்பை** வழங்கியிருந்தார். எனினும், குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைப்பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த கடன்தாரர்கள் / அடைமானம் வைத்தவர்கள் தவறியிருப்பதால், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவுகள் 13(4) மற்றும் 14 மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட விதித்தொகுப்பின் விதி 8-ன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை பிரயோகித்து, கீழே கையொப்பமிட்டுள்ள நபர் கீழ்க்கண்ட சொத்துக்களை **இயற் உடைமை** (Physical Possession) செய்திருக்கிறார்.

எல்ஐசி HFL இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் இயற் உடைமை எடுக்கப்பட்டிருக்கிற மற்றும் எல்ஐசி HFL-க்கு அடைமானம் வைக்கப்பட்டிருந்த கீழே விவரணை செய்யப்பட்டுள்ள அசையா சொத்தானது "எங்கே உள்ளதோ அதன்படி", "என்னவாக உள்ளதோ அதன்படி" மற்றும் "அதில் என்னவெல்லாம் உள்ளதோ அவை அனைத்தும்" மற்றும் வேறு வழிவகைக்கு வாய்ப்பில்லை என்ற அடிப்படையில், **2024 மார்ச் 15** அன்று விற்பனை செய்யப்படும் என்று இதன் வழியாக பொதுவாக பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக, கீழ்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்படுகிறது. இச்சொத்து குறித்த ஏற்புடைய குறைந்தவிலை மற்றும் பிணை வைப்புத்தொகை விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

சொத்து 1 - திரு. அரிஹந்த் ரீடெய்ல் பிரைவேட் லிமிடெட் & திரு. விஷால் சுரானா
கடன் எண். - 510100004758 & 510100005557

சொத்தின் விவரணை: வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் ராயபுரம் சார்பதிவு மாவட்டத்தின் வரம்பெல்லைகளுக்குள் தண்டையார்பேட்டை டிவிஷன், கோட்டை - தண்டையார்பேட்டை வட்டத்தின் கீழ், பிளாக் எண்.25, மாவட்ட ஆட்சியரின் சான்றிதழ் எண்.3533, மறு-சர்வே எண்கள் 1753/1 & 1753/2 (பழைய எண் 54 & 57), என்பதில் உள்ளடங்கிய 29664 சதுர.அடி நிலப்பரப்புடன் 60540 சதுர.அடியில் கட்டப்பட்ட கட்டிடப் பரப்பினைக் கொண்டுள்ள கட்டிடம் என்ற சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். இந்நிலச்சொத்தானது வடக்கில்: சிமெண்ட்ரி சாலை, கிழக்கில்: ஆர்.எஸ். எண்.1751/1, தெற்கில் ஆர்.எஸ். எண்.1752/2, மேற்கில்: ஆர்.எஸ்.எண்.1752/2 என்ற நாற்புற எல்லைகளால் சூழப்பட்டு புதிய எண்.18 (பழைய எண்.72), சிமிட்ரி சாலை, சென்னை 600021 என்ற இடத்தில் அமைந்துள்ளது.

கடன் கேட்பு அறிவிப்பு தேதி: 29.04.2021	**கணக்கு விவரங்கள்**
செலுத்துமாறு கோரப்படும் தொகை: ரூ.54,96,31,528.41/- என்பதுடன் மேலதிக வட்டி, கட்டணம் மற்றும் செலவுகள்.	**பயனுறுநரின் பெயர்:** எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
அடையாள உடைமை தேதி: 04.12.2021	**வங்கி:** ஆக்ஸிஸ் பேங்க், மையப்படுத்தப்பட்ட கலெக்ஷன் ஹப்
இயற் உடைமை தேதி: 23.09.2022	**கணக்கு எண்:** HFLESOCHAD04758
ஏற்புடைய குறைந்த விலை: ரூ.51,00,00,000/- (ரூபாய் ஐம்பத்து ஒரு கோடி மட்டும்)	**IFSC குறியீடு:** UTIB0CCH274
பிணை வைப்புத் தொகை (EMD): ரூ.5,10,00,000/- (ரூபாய் ஐந்து கோடியே பத்து இலட்சம் மட்டும்)	

சொத்து 2 - D. சதீஷ், ஜெயகிருஷ்ணன் S, M/s. நோபிள் ஷிப்பிங் & லாஜிஸ்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் எஸ்ஜே எக்ஸ்போர்ட்ஸ்.
கடன் எண் - 510600009981 & 510600010004

சொத்தின் விவரணை: உருப்படி எண்.1: தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவு மாவட்டத்தின் வரம்பெல்லைகளுக்குள், காஞ்சிபுரம் மாவட்டம், முன்னாள் தாம்பரம் வட்டம், தற்போது சோழிங்கநல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமத்தின் எண். 116, பழைய புல எண்.13/8B, பட்டாவின்படி புதிய புல எண்.13/8B-ல் வ.உ.சி. நகர் விரிவு என்ற மனைப்பிரிவில், வடக்கில்: 22 அடி சாலை, தெற்கில்: புல எண். 13/6A1 மற்றும் 13/6A2, என்பதில் நிலச்சொத்து, கிழக்கில்: மனை எண்.7, மேற்கில்: மனை எண்.5 என்ற நாற்புற எல்லைகளால் சூழப்பட்டு, வடபுறத்தில்: கிழக்கிலிருந்து மேற்காக 25 அடி, தென்புறத்தில்: கிழக்கிலிருந்து மேற்காக 22 அடி, கிழக்குப்புறத்தில் வடக்கிலிருந்து, தெற்காக: 99 அடி, மேற்குப்புறத்தில்: தெற்கிலிருந்து வடக்காக 95 அடி என்ற நீள அகல அளவீடுகளைக் கொண்டு 2400 சதுர.அடி பரப்பளவுடன் மனை எண். 6 - ல் உள்ளடங்கிய நிலச்சொத்தில் அடங்கிய அனைத்தும்.

உருப்படி எண்.2: தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவு மாவட்டத்தின் வரம்பெல்லைகளுக்குள், காஞ்சிபுரம் மாவட்டம், முன்னாள் தாம்பரம் வட்டம், தற்போது சோழிங்கநல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமத்தின் எண். 116, பழைய புல எண்.13/8, பட்டாவின்படி புதிய புல எண்.13/8C-ல் வ.உ.சி. நகர் விரிவு என்ற மனைப்பிரிவில், வடக்கில்: 22 அடி சாலை, தெற்கில்: புல எண். 13/6A1 மற்றும் 13/6A2, என்பதில் நிலச்சொத்து, கிழக்கில்: மனை எண்.8, மேற்கில்: மனை எண்.6 என்ற நாற்புற எல்லைகளால் சூழப்பட்டு, வடபுறத்தில்: கிழக்கிலிருந்து மேற்காக 49 அடி, 6 அங்குலம், தென்புறத்தில்: கிழக்கிலிருந்து மேற்காக 49 அடி, 6 அங்குலம், கிழக்குப்புறத்தில் வடக்கிலிருந்து, தெற்காக: 97 அடி, 6 அங்குலம், மேற்குப்புறத்தில்: தெற்கிலிருந்து வடக்காக 96 அடி, 6 அங்குலம் என்ற நீள அகல அளவீடுகளைக் கொண்டு 4800 சதுர.அடி பரப்பளவுடன் மனை எண். 7-ல் உள்ளடங்கிய நிலச்சொத்தில் அடங்கிய அனைத்தும்.

உருப்படி எண்.3: தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவு மாவட்டத்தின் வரம்பெல்லைகளுக்குள், காஞ்சிபுரம் மாவட்டம், முன்னாள் தாம்பரம் வட்டம், தற்போது சோழிங்கநல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமத்தின் எண். 116, பழைய புல எண்.13/8, பட்டாவின்படி புதிய புல எண்.13/8D-ல் வ.உ.சி. நகர் விரிவு என்ற மனைப்பிரிவில், வடக்கில்: 22 அடி சாலை, தெற்கில்: புல எண். 13/6A1 மற்றும் 13/6A2, என்பதில் நிலச்சொத்து, கிழக்கில்: மனை எண்.9, மேற்கில்: மனை எண்.7 என்ற நாற்புற எல்லைகளால் சூழப்பட்டு, வடபுறத்தில்: கிழக்கிலிருந்து மேற்காக 48 அடி, 6 அங்குலம், தென்புறத்தில்: கிழக்கிலிருந்து மேற்காக 48 அடி, 6 அங்குலம், கிழக்குப்புறத்தில் வடக்கிலிருந்து, தெற்காக: 100 அடி, 6 அங்குலம், மேற்குப்புறத்தில்: தெற்கிலிருந்து வடக்காக 97 அடி, 6 அங்குலம் என்ற நீள அகல அளவீடுகளைக் கொண்டு 4800 சதுர.அடி பரப்பளவுடன் மனை எண். 8-ல் உள்ளடங்கிய நிலச்சொத்தில் அடங்கிய அனைத்தும்; மாநகராட்சி பதிவேட்டின்படி, கதவு எண்.2/104E, வ.உ.சி. நகர் விரிவு, ஈஞ்சம்பாக்கம், சென்னை - 600197 என்ற முகவரியில் உருப்படி 1 முதல் 3 வரை, முறையே மனை எண்கள்.6, 7 மற்றும் 8 ஆகியவற்றில் மொத்தத்தில் 12000 சதுர.அடி பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடம்.

EC-ன் படி எங்களது சார்ஜ்க்கு அடுத்து வருமான வரித்துறையின் பற்றுகை பிரதிபலிக்கிறது.

கடன் கேட்பு அறிவிப்பு தேதி: 15.11.2017	**கணக்கு விவரங்கள்**
செலுத்துமாறு கோரப்படும் தொகை: ரூ.10,69,84,672/- என்பதுடன் மேலதிக வட்டி, கட்டணம் மற்றும் செலவுகள்.	**பயனுறுநரின் பெயர்:** எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
அடையாள உடைமை தேதி: 15.09.2021	**வங்கி:** ஆக்ஸிஸ் பேங்க், மையப்படுத்தப்பட்ட கலெக்ஷன் ஹப்
இயற் உடைமை தேதி: 06.06.2023	**கணக்கு எண்:** HFLESOMATY09981
ஏற்புடைய குறைந்த விலை: ரூ.10,00,00,000/- (ரூபாய் பத்து கோடி மட்டும்)	**IFSC குறியீடு:** UTIB0CCH274
பிணை வைப்புத் தொகை (EMD): ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்)	

சொத்து 3 - M/s. சுஜாதா பயோடெக், காலம் சென்ற டாக்டர். சி.கே. ராஜ் குமார், திருமதி. சுஜாதா ராஜ்குமார் & பிற சட்ட வாரிசுகள், M/s. நம்பி & கோ
கடன் எண் - 510100004765

சொத்தின் விவரணை: சென்னை மாவட்டத்தின் எழும்பூர் - நுங்கம்பாக்கம் வட்டத்தின் கீழ், புலியூர் கிராமத்தில் பிளாக் எண்.45-ல் T.S. எண்.4/5 (பகுதி), C.A. எண். 278/93-94-ல் பட்டா, பட்டாவின்படி T.S. எண்.4/73 என்பதன் கீழ் உள்ளடங்கிய மற்றும் புதிய கதவு எண்.23, பழைய கதவு எண்.8, டாக்டர். அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600024 என்ற முகவரியில் 12069 சதுர.அடி என்ற பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதன்மீது 16040 சதுர.அடி என்ற கட்டப்பட்ட கட்டிடப் பரப்பினைக் கொண்டிருக்கும் கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். இந்நிலச்சொத்தானது, சென்னை மத்திய பதிவு மாவட்டம் மற்றும் கோடம்பாக்கம்; துணைப்பதிவு மாவட்ட வரம்பெல்லைகளுக்குள் கீழ்வரும் நாற்புற எல்லைகளால் சூழப்பட்டுள்ளது: வடக்கில்: ஜானகி அம்மாள் தெரு, தெற்கில்: திருமதி. வாசுகி அவர்களின் சொத்து, கிழக்கில்: பிளாக் எண்.9 மற்றும் மேற்கில்: அம்பேத்கர் சாலை.

கடன் கேட்பு அறிவிப்பு தேதி: 17.04.2018	**கணக்கு விவரங்கள்**
செலுத்துமாறு கோரப்படும் தொகை: ரூ.23,40,59,801/- என்பதுடன் மேலதிக வட்டி, கட்டணம் மற்றும் செலவுகள்.	**பயனுறுநரின் பெயர்:** எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
அடையாள உடைமை தேதி: 03.08.2018	**வங்கி:** ஆக்ஸிஸ் பேங்க், மையப்படுத்தப்பட்ட கலெக்ஷன் ஹப்
இயற் உடைமை தேதி: 07.03.2022	**கணக்கு எண்:** HFLESOMAAY04765
ஏற்புடைய குறைந்த விலை: ரூ.25,00,00,000/- (ரூபாய் இருபத்து ஐந்து கோடி மட்டும்)	**IFSC குறியீடு:** UTIB0CCH274
பிணை வைப்புத் தொகை (EMD): ரூ.2,50,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்)	

மின்-ஏலத்தின் பிற விவரங்கள்:

a)	மின் ஏல வலைதளம்	**www.auctionbazaar.com**
b)	சொத்து ஆவணங்களின் நிழற்பட நகல்களை ஆய்வு செய்வதற்கான தேதி & நேரம்	2024 மார்ச் 12-ம் தேதி காலை 11.00 முதல் மாலை 3.00 மணி வரை **எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட், சென்னை உள் அலுவலகம்: "ஹாரிங்டன் சேம்பர்ஸ்", பிளாக் எண். A, முதல் தளம், எண்.30/1A, அப்துல் ரஜாக் முதல் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.**
c)	சொத்தை பார்வையிடல்: அலுவலக வசதிக்கேற்ப நேரம் நிர்ணயிக்கப்படும்:	2024 மார்ச் 13-ம் தேதி காலை 11.00 முதல் மாலை 3.00 மணி வரை தொடர்பு நபர்: **திரு. மனோஜ்,** மொபைல் எண்: 88611 45681
d)	ஆன்லைன் டெண்டர் / ஏலத்தொகை சமர்ப்பிப்பிற்கான இறுதி தேதி	2024 மார்ச் 14-ம் தேதி மாலை 5.00 மணி
e)	மின் ஏல தேதி	2024 மார்ச் 15-ம் தேதி காலை 11.00 மணி முதல் 1.00 மணி வரை

மேற்குறிப்பிடப்பட்ட சொத்தின் மின் ஏல விற்பனைக்கான இந்த பொது அறிவிப்பின் மேலதிக தொடர்ச்சியாக (2002 SARFAESI சட்டத்தின் வரையறைகள் மற்றும் அதன் கீழான விதிகளின்படி) கீழ்க்கண்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி மேற்குறிப்பிடப்பட்ட சொத்துக்களை வாங்குவதற்கு ஆன்லைன் வழிமுறை வழியாக மட்டும் ஆஃபர்களை எல்ஐசிஹெச்எஃப்எல் வரவேற்கிறது:

1. **'எங்கு இருக்கிறதோ அதன் அடிப்படையில்' மற்றும் 'என்னவெல்லாம் இருக்கிறதோ அதன் அடிப்படையில்'** மற்றும் **'எந்த மறுவழிவகை இல்லாத அடிப்படையில்'** மின் ஏல விற்பனை ஆன்லைனில் நடத்தப்படுகிறது. எல்ஐசிஹெச்எஃப்எல்-ன் அனுமதி பெற்ற மின் ஏல சேவை வழங்குனரான, M/s. ஆக்ஷன் பஜார் நிறுவனம் வழியாக இந்த மின் ஏலம் நடத்தப்படும்.
2. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவு மற்றும் தகவலின்படி, பிரசுரங்களில் வெளியிடப்பட்டிருக்கின்ற அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மீது வேறுபிற வில்லங்கம் ஏதும் இல்லை. வாங்குபவர் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்ற ("caveat emptor") என்ற கோட்பாட்டிற்கு ஏலதாரர்கள் கட்டுப்பட்டவர்கள் மற்றும் சொத்தின் அமைவிடம் மற்றும் அடையாளம், நிறுவனத்தின் அல்லது பிணையம் வைக்கப்பட்ட சொத்தின் மீது எந்தவொரு வில்லங்கங்கள், சட்டரீதியான கட்டுப்பாடுகள், சொத்துவரி நிலுவைத்தொகைகள், வருமான வரி, சுங்க வரி, தொழிலாளருக்குத் தரப்பட வேண்டிய ஊதிய நிலுவைத்தொகைகள், மின்சாரம் மற்றும் பராமரிப்பிற்கான கட்டணங்கள் ஆகியவை குறித்து துணைப்பதிவாளர் அலுவலகங்கள் / சிவில் நீதிமன்றங்களில் பொது பதிவுருக்களை ஆய்வுசெய்தல் குறித்து அவர்களே சொந்தமாக உரிய கவனத்துடன் சரிபார்ப்புகளை மேற்கொள்வது ஏலதாரர்களின் பொறுப்பாக இருக்கும். வெற்றிகரமான ஏலதாரர், சொத்தின் விற்பனை விலைக்கும் கூடுதலாக, அந்த சொத்து தொடர்பான நகராட்சி வரிகள் பராமரிப்பு / சங்கத்தற்கான கட்டணங்கள், மின் கட்டணங்கள், தண்ணீர் வரி / கட்டணம், முத்திரைக் கட்டணம், ஆவணப் பதிவுக் கட்டணங்கள் (பொருந்துமானால்) மற்றும் எந்தவொரு, தொடர்புடைய பிற கட்டணங்கள் மற்றும் செலவினங்களை ஏற்றுக்கொண்டு செலுத்த வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டவாறு சொத்துக்கள் மீது எந்தவொரு தன்மையையும் கொண்ட அதிகாரப்பகிர்வு, பற்றுரிமை, பொறுப்புறுதிகள் போன்றவற்றிற்கு LICHFL-ஐ பொறுப்பாக்க இயலாது.
3. ஏலம் கேட்க திட்டமிடும் நபர்கள் அவர்களது பெயர்களை **"www.auctionbazaar.com"** என்ற வலைதளத்தில் பதிவு செய்ய வேண்டும் மற்றும் கட்டணமின்றி அவர்களது பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல்லைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள சேவை வழங்குனரிடமிருந்து **மின்-ஏலம்** மீது, ஏலம் கேட்க விரும்புபவர்கள் ஆன்லைனில் கிடைக்கும் பயிற்சியினை பெற்றுக்கொள்ளலாம்: **M/s. ஆக்ஷன் பஜார்,** பார்க் அவென்யூ 2, 7-1-28/1/A/1, பார்க் அவென்யூ ரோடு, லீலா நகர், அமீர்பேட், ஹைதராபாத், தெலங்கானா - 500 016. தொடர்புகொள்ள வேண்டிய நபர் - திரு. அசோக் G, மின்னஞ்சல் - **"contact@auctionbazaar.com",** மொபைல் - 77990 72999.
4. இந்த மின்-ஏல விற்பனை 2002 SARFAESI சட்டம் / விதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டது. இதன்கீழே / வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகளும் விருப்பம் கொண்டிருக்கின்ற / பங்கேற்கின்ற ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆஃபர் / ஏல நிபந்தனைகளுக்கும் உட்பட்டவையாகும்.
5. ஆன்லைன் மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கு ஒவ்வொரு ஏலதாரரும் அவரது / அவளது சொந்த மின்னஞ்சல் முகவரியைக் கொண்டிருப்பது அவசியம். LICHFL-ன் அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் முன்பாக தகுதியுள்ள ஏலதாரராக, உத்தேசித்துள்ள ஏலதாரர் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்தவுடன், ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம், மின் - ஏலத்திற்கான ஏல செயல்தளத்தின் வழியாக பங்கேற்பதற்கான அவரது / அவளது ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டும். மின் ஏல சேவை வழங்குனரிடமிருந்து லாகின் செய்வதற்கான அடையாளம் (ID) மற்றும் கடவுச்சொல்லைப் பெறுவது டெண்டர் சமர்ப்பிப்பவரின் / ஆன்லைன் ஏலதாரரின் தனிப்பட்ட பொறுப்பாக இருக்கும்.
6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்புடைய குறைந்த விலை தொகைக்கும் குறைவாக மேற்குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் விற்கப்படாது.
7. செலுத்தப்பட்டுள்ள பிணை வைப்புத்தொகை வெற்றிகரமான ஏலதாரராக இருப்பின், அவர் செலுத்த வேண்டிய தொகையில் சரிகட்டப்படும். இல்லையெனில், மற்றவர்களுக்கு திரும்ப வழங்கப்படும். இந்த பிணை வைப்புத்தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படாது.
8. வெற்றிகரமான ஏலதாரர் ஏலத்தொகையை செலுத்த தவறுவாரானால் அல்லது எந்தவொரு விதத்திலும் மின்-ஏலத்தின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை கடைப்பிடிக்கத் தவறுவாரானால், அவரால் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள பிணை வைப்புத்தொகை மீதான உரிமை இழக்கப்பட்டு விடும் மற்றும் அவர் / அவள், அத்தகைய உரிமை இழக்கப்பட்ட தொகை மீது எந்தவொரு உரிமைக்கோரிக்கையையும் கொண்டிருக்க மாட்டார்.
9. மேற்கண்ட ஏலத்தின் (d) பிற விவரங்களின் படி ஏல சமர்ப்பிப்புக்கான உரிய தேதி மற்றும் நேரத்திற்குள் அல்லது அதற்கு முன்னதாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவை வழங்குனருக்கு பான் அட்டை மற்றும் (ஆதார் அட்டை), முகவரிச்சான்று உட்பட, KYC ஆவணங்களின் ஸ்கேன் செய்த நகலை ஆன்லைன் வழியாக www.auctionbazaar.com என்ற இணையதளத்தில் மேற்குறிப்பிடப்பட்ட பிணை வைப்புத்தொகை (EMD) உடன் சேர்த்து சமர்ப்பிக்கலாம்.
10. டெண்டர்கள் திறப்பிற்குப் பிறகு ஏற்புடைய குறைந்தபட்ச விலைக்கும் குறையாத தொகைக்கு தங்களது ஏலங்களை சமர்ப்பித்திருக்கும் விருப்பமுள்ள ஏலம் கேட்கும் நபர்களுக்கு, ஏலம் கேட்புத் தொகையை அதிகரிப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் தனிப்பட்ட விருப்ப முடிவின் பேரில் ஒரு வாய்ப்பு வழங்கப்படும்.
11. தொடக்கநிலை ஏல உயர்வுத்தொகை ஒவ்வொரு BID-க்கும் ரூ.5,00,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியால் இயலாற்றலுடன் இது முடிவு செய்யப்படும்.
12. விற்பனை குறித்து அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியால் ஆஃபர் ஏற்கப்பட்டவுடன், வெற்றிகரமாக ஏலதாரர் உடனடியாகவே விற்பனை விலையின் தொகையில் 25%-ஐ, ஏற்கனவே செலுத்திய EMD தொகையை சரிக்கட்டியதற்குப் பிறகு, செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும்பட்சத்தில், செலுத்தப்பட்ட பிணை வைப்புத்தொகை இழக்கப்பட்டுவிடும். விற்பனை விலையில் எஞ்சியுள்ள 75% தொகை, அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் தனிப்பட்ட விருப்புரிமையின் பேரில் விற்பனை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தப்படக்கூடியதாகும். குறித்துரைக்கப்பட்ட கால அளவிற்குள் எஞ்சியத் தொகையை செலுத்தத் தவறும் நேர்வில், ஏற்கனவே செலுத்தியிருக்கும் தொகை இழக்கப்பட்டுவிடும். டெபாசிட் தொகை இழக்கப்படுவது குறித்து, வெற்றிகரமான ஏலதாரருக்கு ஏதும் மேலதிக அறிவிப்பை அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரி வழங்க வேண்டியதில்லை.
13. பதிவுக் கட்டணம், முத்திரைக் கட்டணம், வரிகள் அல்லது அவரது / அவளது பெயரில் பிணையம் வைக்கப்பட்ட சொத்தை மாற்றிக் கொள்வதற்கு செலுத்தத் தேவைப்படுகின்ற வேறுபிற கட்டணங்கள் போன்ற விற்பனை சான்றிதழ் மீது செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை வெற்றிகரமான ஏலதாரர் செலுத்த வேண்டும்.
14. விற்பனை சான்றிதழானது, ஒட்டுமொத்த விற்பனை விலை, தொகை முழுவதையும் பெற்றதற்குப் பிறகே வெற்றிகரமான ஏலதாரர் பெயரில் மட்டுமே வழங்கப்படும்.
15. மின் ஏல விற்பனையின் வரையறைகள் மற்றும் நிபந்தனையின்படி மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை வாங்குவதற்கு ஆர்வமுள்ள வாங்குனர்களை கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் கொண்டு வரலாம் என்று இதன்வழியாக அவர்களுக்கு அறிவிப்பு தரப்படுகிறது.
16. அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் வசதிக்கேற்ப ஆவணங்களின் நிழற்பட நகல்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் மீதான அமைவிட பரிசோதனையை வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளலாம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள மின்-ஏலத்தின் (b) & (c) என்ற பிற விவரங்களின்படி இதற்கென குறித்துரைக்கப்பட்ட அலுவலரை ஏலம் கேட்க ஆர்வமுள்ள நபர்கள் தொடர்பு கொள்ளலாம். சொத்து / ஆவண நகல்களை பார்வையிடல் செய்வது தொடர்பான அனைத்து போக்குவரத்து செலவுகள் மற்றும் பிற செலவுகள் ஆர்வம் காட்டும் ஏலதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.
17. மிக உயர்ந்த தொகைக்கான முன்மொழிவு / ஆஃபர் அல்லது எந்தவொரு அல்லது அனைத்து முன்மொழிவுகளையும் / ஆஃபர்களையும் ஏற்றுக்கொள்ள அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரி கட்டுப்பட்டவரல்ல. அதற்கான எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல், எந்தவொரு அல்லது அனைத்து டெண்டர்களையும் / விலைப்புள்ளிகளையும் ஏற்பதற்கான அல்லது நிராகரிப்பதற்கான உரிமை அவருக்கு உண்டு.
18. எந்தவொரு வகையிலான காரணத்தையும் அல்லது முன்னறிவிப்பையும் வழங்காமல் டெண்டர் விற்பனை / ஏலத்தை ரத்து செய்ய / ஏற்க / நிராகரிக்க / மாற்ற / திருத்தம் செய்ய / ஒத்திப்போடுகின்ற உரிமை எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்-க்கு இருக்கிறது.
19. இச்சொத்து விற்பனையானது ஈட்டு கடன் வழங்குனரான எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்-ஆல் உறுதி செய்யப்படுவதற்கு உட்பட்டதாகும்.
20. விற்பனையின் விரிவான வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் சொத்துக்களின் முழு விவரணைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள மின்-ஏல சேவை வழங்குனரான **"M/s. ஆக்ஷன் பஜார்"**-ன் வலைதளத்தையும் மற்றும் **"M/s. Auction Bazaar"** and website **www.auctionbazaar.com** என்ற வலைதளத்தையும் காணவும்.

இடம்: சென்னை
தேதி: 29.02.2024

ஒப்பம்/-
அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரி
எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

இண்டியன் பேங்க் | இந்தியன் வங்கி | அலகாபாத்

அஸ்வரவந்தபுரம் கிளை
எண்.137/A, சித்தூர் சென்னை ரோடு, அஸ்வரவந்தபுரம், அஞ்சல் - 631 302. R K பேட்டை தாலுகா, திருவள்ளூர். தொலைபேசி : 04172-262253. மின்னஞ்சல் : aswaravanthapuram@indianbank.co.in

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கு)

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 8 மற்றும் 9-க்கு ஏற்ப எங்கள் அஸ்வரவந்தபுரம் கிளையின் கடன்தாரர்கள் : **(1) திருமதி. அஞ்சலா R, (கடன்தாரர் & அடமானதாரர்),** க/பெ ரவிச்சந்திரன், 404, 117, கட்டாரிக்குப்பம், பள்ளிப்பட்டு தாலுகா, திருவள்ளூர், சென்னை, **(2) திரு. R. சாம்பசிவம், (இணை-கடன்தாரர்),** 404, 117, கட்டாரிக்குப்பம், பள்ளிப்பட்டு தாலுகா, திருவள்ளூர், சென்னை, ஆகியோருக்கு **07.12.2021** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி, அதில் குறிப்பிட்டுள்ளபடி கணக்கு எண்:6398558854 நோக்கி செலுத்த வேண்டிய தொகையான **ரூ.4,29,661/- (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்து ஒன்று மட்டும்)** மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் விதி 8 மற்றும் 9-க்கு இணங்கவும், **27 பிப்ரவரி 2024** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்து இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையான **ரூ.4,87,743/- (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து எழுநூற்று நாற்பத்து மூன்று மட்டும்)** மற்றும் 27.02.2024 முதல் வட்டி & கட்டணங்களுடன் சேர்த்து பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக்கொள்ள கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிணைய தொகைக்கு உட்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அசையா சொத்தின் விவரம்

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

அடமான சொத்து : கட்டாரிக்குப்பம், கிராமம், R K பேட்டை தாலுகாவில் உள்ள சொத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். இதன் கதவு எண்.3/114, பழைய சர்வே எண்.133/11A, புதிய சர்வே எண்.133/11A2, 1760.00 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடம். இது R K பேட்டை துணை பதிவு மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. எல்லைகள் - வடக்கில் : உரிமையாளரின் நிலம், தெற்கில் : திரு பழனி அவர்களின் காலி மனை, கிழக்கில் : கட்டாரிக்குப்பம், ரோடு, மேற்கில் : உரிமையாளரின் நிலம்.

தேதி : 27.02.2024
இடம் : R K பேட்டை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

DBS

பாதுகாப்பு பெட்டகத்தை திறப்பது குறித்த அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் ("பெட்டக வாடகைதாரர்") டிபிஎஸ் வங்கி இந்தியா லிமிடெட்-இன் வங்கிக் கிளையில்("வங்கி") பாதுகாப்பு பெட்டகங்களை வாடகைக்கு எடுத்திருந்தனர் என்பதை பொது மக்களின் தகவலுக்காக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பாதுகாப்பு பெட்டகங்கள் 7 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் உள்ளது மற்றும் பெட்டகங்களின் வாடகை தொடர்ந்து மூன்று (3) வருடங்களாக வாடகைதாரர்களால் செலுத்தப்படவில்லை. மேலும் அந்த பாதுகாப்பு பெட்டகங்கள் பயன்படுத்தப்படாததற்கான மற்றும் வாடகை செலுத்தாததற்கான காரணத்தை சரிபார்க்க, வங்கி பல நினைவூட்டல் கடிதங்களை பாதுகாப்பு பெட்டக வாடகைதாரருக்கு அனுப்பியுள்ளது, ஆனால் இன்றுவரை பெட்டக வாடகைதாரர்களிடமிருந்து எந்த பதிலும் இல்லை.

கிளை	பெட்டக வாடகைதாரர் பெயர்	பெட்டக வாடகைதாரர் முகவரி	பெட்டக எண்	பெட்டகம் வாடகைக்கு எடுக்கப்பட்ட தேதி
சேலையூர்	திரு. S K ஹாசன் பாஷா & திருமதி பாத்திமா தஸ்னிம்	எண்.11, சிவசண்முகம் பிள்ளை தெரு, சென்னை - 600045	யூனிட் 2-S3-21	14-12-2007
மேற்கு தாம்பரம்	திரு. A நிர்மல் குமார்	எண். 51, 1வது பிரதான சாலை, நியூ காலனி, குரோம்பேட்டை, சென்னை - 600044	யூனிட் 3-M2-46	08-09-2010
மேற்கு தாம்பரம்	M/s. தியாகம் சிட்ஸ் & திரு. A. நிர்மல்குமார்		யூனிட் 3-L1-49	08-09-2010
மேற்கு தாம்பரம்	செல்வி.ராதிகா T	எண். 72, கலயாண சுந்தரம் தெரு, கஸ்தூரிபாய நகர், மேற்கு தாம்பரம், சென்னை - 600045	யூனிட் 3-S2-36	11-01-2011

பாதுகாப்பு பெட்டகம் குறித்து இந்திய ரிசர்வ் வங்கியின் திருத்தப்பட்ட வழிகாட்டுதலகளின்படி, மேற்குறிப்பிட்ட பெட்டகங்களைத் திறக்கும் நடவடிக்கையை வங்கி துவக்க இருக்கிறது. இந்தப் பெட்டகங்களில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்களின் மேல் எந்த நபராவது ஏதேனும் உரிமை கோர வேண்டுமெனில், இந்த அறிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் தகுந்த ஆதாரங்களுடன் எங்களது வங்கிக்கிளையை தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். இந்தக் காலக்கெடுவுக்குள் வாடகைதாரர்களிடமிருந்து வங்கிக்கு எந்த உரிமைக் கோரலோ, அல்லது எந்தத் தகவலும் பெறப்படவில்லையென்றால், குறிப்பிட்ட பெட்டகங்களைத் திறக்கும் நடவடிக்கையை வங்கி செயல்படுத்தும். பெட்டகங்கள் திறக்கப்படுவதற்கும், அந்த பெட்டகங்களில் உள்ள பொருட்களை அப்புறப்படுத்துவதற்கும், பெட்டக வாடகைதாரர்கள் அல்லது வேறு எந்த நபருக்கும் வங்கி பொறுப்பாகாது.

டிபிஎஸ் பேங்க இந்தியா லிமிடெட்டின் சாா்பாக,
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்
(முந்தைய பெயர் எல்&டி பைனான்ஸ் லிட், டிசம்பர் 4 2023 முதல் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் உடன் சேர்க்கப்படும் திட்டம் மூலம் ஒருங்கிணைப்பு)
பதிவு அலுவலகம்: எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் பிருந்தாவன் பில்டிங், ஃபிளாட் நம்பர் 177, சிஎஸ்டி ரோடு, கலினா, சாந்தாகுருஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098.
சிஐஎன் நம்பர்: L67120MH2008PLC181833
கிளை அலுவலகம்: சென்னை

L&T Finance

அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான பொது ஏலம்

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இண்டரஸ்ட் ஆக்ட் 2002 (54 ஆஃப் 2002) கீழ் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் அவருக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்தை **"இருக்கும் இடம்"** மற்றும் **"இருக்கும் நிலை"** என்ற அடிப்படையில் **"பொது ஏலம்"** மூலம் கடன் பாக்கி மற்றும் அது சம்பந்தமான கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வசூலிக்க ஏலம் விட உள்ளார்.

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்	பிணைய சொத்து முகவரி	கடன் கணக்கு எண்	சொத்து கையகப்படுத்தப்பட்ட விவரம்	ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அல்லது அதிகம் (₹)	28.02.2024 அன்று படி மொத்தம் நிலுவை பாக்கி தொகை	ரிசர்வ் விலை (₹)	ஆய்வு தேதி	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
1. ஆர் ஏ ராமசாமி 2. ரோஸி ஆர் 3. ஸ்ரீ சாஸ்தா டிரேடர்ஸ் (அதன் உரிமையாளர் ஏ ராமசாமி மூலம்)	பின்வரும் இடத்தில் அமைந்துள்ள அனைத்து அசையா சொத்தின் முகவரி: கீழ்த்தளம் ஃபிளாட் எண் ஜி1, ஷெபானிஸ் சுமலம் அபார்ட்மெண்ட். இந்த ஃபிளாட் 1008 சதுர அடி பில்ட்அப் ஏரியாவுடன் கவர்டு கார் பார்க்கிங் மற்றும் பிரிக்கப்படாத 502 சதுர அடி நிலம், இதர வழக்கமான பயன்பாட்டு உரிமைகள் கொண்டது. மொத்தம் 2184 சதுர அடி பரப்பில் பிளாட் எண் 2, சாய் கணேஷ் நகர் பகுதி II இல் அமைந்துள்ளது. இது சர்வே எண். 189/1, பட்டா எண் 2399, புதிய பட்டா சர்வே எண். 189/9, ஜல்லடியன்பேட்டை கிராமத்தில் எண். 128, ஷோளிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை எனும் முகவரியில் உள்ளது மற்றும் இதன் எல்லைகள்: எல்லைகள்: கிழக்கு - ஸ்ரீ ஆஞ்சநேயா நகர் லேஅவுட் பகுதி - II; மேற்கு - 20 அடி ரோடு; வடக்கு - பிளாட் எண் 3; தெற்கு - பிளாட் எண் 1. அளவுகள்: வடக்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காக: 52 அடி; தெற்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காக: 52 அடி; கிழக்குப் பகுதியில் பகுதியில் வடக்கிலிருந்து தெற்காக: 42 அடி; மேற்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்காக: 42 அடி	H184341 80719114 340/ H184341 80719114 340L/ H184341 80719114 340G	2 நவம்பர் 2023	₹3,38,190/-	₹52,08,839.46/-	₹33,81,900/-	30.03.2024	05-04-2024 காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. மின்னணு ஏல விற்பனை, சர்ஃபேஸி சட்ட பிரிவுகளின் கீழ் மற்றும் பொது மின்னணு ஏல முறை மூலம் https://sarfaesi.E-auctiontiger.net இணையதளம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆன்லைனில் நடத்தப்படுகிறது.
2. இங்கே மேலே குறிப்பிடப்பட்ட நாள் அன்று மற்றும் நேரத்தில் பொது மின்னணு ஏலம் நடத்தப்படும், மேலே குறிப்பிடப்பட்ட பிணை சொத்து **"எங்கே உள்ளது என்பதன் அடிப்படையில்" மற்றும் "எந்த நிலையில் உள்ளது என்பதன் அடிப்படையில்"** விற்கப்படும்.
3. பொது மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்காக, உத்தேசித்துள்ள வாங்குபவர்கள் / ஏலதாரர்கள் ஏல படிவத்தை, திருப்பியளிக்கத்தக்க பிணை சொத்தின் ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அத்துடன் பான் அட்டை, நிறுவனம் என்னும் நிலையில் குழு தீர்மானங்கள் மற்றும் முகவரிச் சான்று நகல்களை **04/04/2024** அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.
4. பொது மின்னணு ஏலத்தில் வெற்றி பெற முடியாத இதர அனைத்து ஏலதாரர்களின் பிணை உறுதிப் பணம் வைப்பு தொகை பொது மின்னணு ஏலம் முடிவுற்ற 7 நாட்களுக்குள்ளாக எல்&டி ஃபைனான்ஸினால் திருப்பி அளிக்கப்படும். பிணை உறுதிப் பணம் வைப்பு தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
5. மின்னணு ஏலத்தில் வெற்றி பெறும் வாங்குபவர்/ஏலதாரர் அவரது/அதன் ஆஃபரில் 25% தொகையை (இஎம்டி உட்பட) எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்கதாக டி.டி./பி. ஓ மூலம் **05/04/2024** தேதி அன்று 18.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு அதாவது ஏல தேதி அன்று அல்லது அடுத்த அலுவல் நாளில் அதாவது **06/04/2024** அன்று செலுத்தப்பட்டு அந்த டெபாசிட் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாக எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் விற்பனை தோல்வி அடைந்து விட்டதாக கருதப்பட்டு வெற்றி பெற்ற ஏலதாரரின் இஎம்டி பறிமுதல் செய்யப்படும். வாங்கும் விலையில் மீதி தொகை அதாவது 75% வாங்குபவரால் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டுக்கு, அசையா சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட பின் பதினைந்தாம் நாள் அன்று அல்லது அதற்கு முன்பாக அல்லது சட்டப்பிரிவுகளின்படி இத்தகைய நீட்டிக்கப்படும் காலவரம்பிற்குள் செலுத்தப்பட வேண்டும்.
6. சொத்தை பார்வையிட அல்லது கூடுதல் தகவல்களுக்கு, ஆர்வமுள்ள ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளலாம். **பெயர் - திருவேங்கடம் ஆர், தொடர்பு எண் 9884044290, எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட், ஷேஜிஎன் டவர்ஸ், 5வது மாடி, நம்பர். 62, எத்திராஜ் சாலை, எக்மோர், சென்னை - 600 008 மற்றும் சந்தோஷ்திவாரி, தொடர்பு எண். 9920490126, எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட், அலுவலகம்: 5வது மாடி, பிருந்தாவன் பில்டிங், பிளாட் எண் 177, கலினா, சிஎஸ்டி ரோடு, மெர்சிடிஸ் ஷோரூம் அருகில், சாந்தாகுரூஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098.** மின்-ஏலத்தின் எந்தக் கட்டத்திலும், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஏலத்தை ஏற்கலாம்/நிராகரிக்கலாம்/மாற்றலாம்/ரத்து செய்யலாம் அல்லது மின்-ஏலத்தை எந்தக் காரணமும் தெரிவிக்காமல், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி ஒத்தி வைக்கலாம்.
7. வெற்றி பெற்ற வாங்குபவர்/ஏலதாரர் சொத்தை தன்னுடைய பேரில் சாதகமாக மாற்றிக்கொள்ள பொருந்தும் சட்டத்தின் படி, ஏதேனும் சட்டப்பூர்வ நிலுவைத் தொகைகள், வரிகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள், முத்திரை வரி, பதிவு கட்டணங்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
8. மேற்கண்ட பாக்கித் தொகைகளுக்கு பொறுப்பான வாங்குபவர்/உத்தரவாதிகள் இந்த விற்பனை அறிவிப்பை, பொது மின்னணு ஏல விற்பனையை நடத்த, செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ் விதி 8(6) கீழ் ஒரு அறிவிப்பாக கருதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. கடன் வாங்குபவர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) மேலே குறிப்பிட்டபடி கடன் நிலுவையில் உள்ள முழு நிலுவைத் தொகையையும் மேற்கூறிய மின்னணு ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். அவ்வாறு செலுத்தத் தவறினால், எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட், சர்ஃபேசி சட்டம், 2002 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சொத்தை விற்கும்.
10. கடன்தாரர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) / பொது மக்கள் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் இடம் முன்னரே எழுத்துப்பூர்வமான அனுமதி பெறாமல் சம்பந்தப்பட்ட பிணைய சொத்துக்களை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் மற்றும் இதர நடவடிக்கைகளை கையாள்வதில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளனர்.

தேதி: 29.02.2024
இடம்: காஞ்சிபுரம், சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்